**08.09.2020**

## பத்திரிக்கைச் செய்தி

**பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ செல்லும் பச்சை வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவை நாளை (09.09.2020) துவங்குகிறது.**

விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை வரை செல்லும் நீல வழித்தடத்திலான சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் நேற்று (07.09.2020) முதல் துவங்கியது.

இதனைத் தொடர்ந்து பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ செல்லும் பச்சை வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவை நாளை (09.09.2020) புதன்கிழமை முதல் துவங்குகிறது. தினந்தோறும் காலை 07.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும். உச்ச நேரங்களில் (Peak Hours) (காலை: 08.30 மணி முதல் 10.30 மணி வரை மற்றும் மாலை: 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை) 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக விமான நிலைய மெட்ரோ செல்லும் நேர் வழித்தட மெட்ரோ இரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே பயணிகள் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் மாறி விமான நிலைய மெட்ரோ செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தூய காற்றின் சுழற்சியை அதிகரிக்கவும் மற்றும் தனிமனித இடைவெளியை பின்பற்றி பயணிகள் மெட்ரோ இரயில்களில் ஏறவும், இறங்கவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் மெட்ரோ இரயில்கள் நிறுத்தப்படும் நேரம் 20 வினாடிகளிலிருந்து 50 வினாடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

பயணிகளின் 100 சதவீத பாதுகாப்பிற்காக அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமி நாசனி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், பயணிகள் மெட்ரோ இரயில் நிலைய கவுண்டர்கள் மற்றும் தானியங்கி கட்டண வசூல் வாயில்களில் (AFC Gates) வரிசையில் நிற்பதை குறைப்பதற்காகவும், தொடர்பில்லா க்யூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. பயணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கைபேசி

செயலியை பதிவிறக்கம் செய்து க்யூஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகளின் நீண்ட வரிசைகளை தவிர்க்கும் பொருட்டு அதி நவீன தானியங்கி பயணச்சீட்டு சான்றளிக்கும் இயந்திரங்களை (Travel Card Reader) அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் நிறுவி உள்ளது. பயணிகள் பயணச்சீட்டு சான்றளிக்கும் இயந்திரங்களை (Travel Card Reader) பயன்படுத்தி தங்கள் திறன் அட்டை (Smart Card) விவரங்களான இருப்புத்தொகை, மீதமுள்ள பயண எண்ணிக்கை, பயணம் குறித்த தகவல்கள் மற்றும் கால அளவை நீட்டித்துகொள்ளலாம்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி தனிமனித இடைவெளியை கடைபிடித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.